**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 210 / 2021**

**வா.சா.1 – ராஜேந்திரன்** **19.10.2024**

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

கே. கே. பள்ளம் குரூப் புல எண் 22/3, 22/7, 353/9, 361/2, 38/1 , 22/7, 20/2, 358/10, 356/15, 356/14, 26/12, 26/4, 359/12, 358/20 25/1 ஆகிய புல எண்கள் மற்றும் மேலப்பிடாவூர் குரூப் புல எண்கள் 177/8 177/7, 177/9, 351/13 மேற்படி புல எண்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சேர்க்கப்பட்டுள்ளது. தாவா அ அட்டவணை 24வது லக்க சொத்தான சர்வே எண் 374/2 சம்மந்தமான பதிவு பத்திரம் பொறுத்து 5, 6, 7 பிரதிவாதிகளுக்கு எதிராக பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என பரிகாரம் கோரியுள்ளேன். நான் பத்திரத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் நானும் 1ம் பிரதிவாதியும் பங்கு வாங்கிக் கொண்டோம் என்றால் சரியல்ல. உடப்பன்குளம் புஞ்சை புல எண் 340/1 – 3 ஏக்கர் 80 செண்ட் அளவுள்ள நிலத்தை 1ம் பிரதிவாதி பெரியணன் கடந்த 27.08.1990 அன்று அழகப்பனிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்து வாங்கினோம். அந்த சொத்து பெரியணனுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் 1985ம் மேஜராகிவிட்டேன் 1985ல் பதிவு கிரையம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் புல எண் 340/1 யை பொறுத்து பொியணனுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 340/1 யை பொறுத்து 1994 ல் 1ம் பிரதிவாதியின் பாகத்தை நான் பதிவு கிரையம் மூலம் வாங்கினேன் என்றால் சரிதான். ஏற்கனவே சர்வே எண் 340/1 யை பொறுத்து பாகம் செய்துள்ளோம் என்றால் இல்லை நான் அதை கிரையம் வாங்கியுள்ளேன். ஏற்கனவே எங்கள் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

பெரியணன் எனக்கு கிரையம் கொடுத்தது போக 2 பாகம் பொியணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கே.கே. பள்ளம் குரூப் புல எண் 358/10 இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சேர்க்கப்படவில்லை. மேற்படி புல எண் 358/10 யை நானும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் எனது அம்மா எங்கள் 3 பேருக்கும் கிரையம் கொடுத்துள்ளார். அந்த சொத்தை பாகம் பிரித்துள்ளோமா என்றால் பாகம் பிரிக்கவில்லை அந்த சொத்தை வழக்கில் சேர்த்துள்ளோம். கே.கே.பள்ளம் குரூப் சர்வே எண் 20/2 – 1 ஏக்கர் 82செண்டை 1ம் பிரதிவாதி 15.05.1992ம் தேதி குஞ்சரத்தம்மாளிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண் 20/2 இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் பத்திரம் உள்ளது. அந்த பத்திரத்தை 10.10.2011 அன்று 1ம் பிரதிவாதியின் எனக்கு, 1ம் வாதியின் மனைவிக்கு மற்றும் 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. சர்வே எண் 20/2 இந்த வழக்கில் சேர்த்து பாகப்பிரிவினை பரிகாரம் கோராததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை